**R 3445 (page 312)** (1904-ஆம் வருஷத்தின் பார்வை)

# வரிசையில் முற்பிதாக்களின் இடம்

## THE RANK OF THE ANCIENT WORTHIES

6-ஆம் தொகுதியை வாசிக்கையில், முற்பிதாக்கள் மற்றும் திரள்கூட்டத்தாருடைய உயிர்த்தெழுதலின் வரிசை தொடர்பாகவும், அவர்களுக்குரிய கனம் தொடர்பாகவும் எங்களில் சிலருக்குக் குழப்பங்கள் அல்லது முரண்பாடுகள் ஏற்பட்டது. விவாதத்திற்கான அந்தப் பத்திகள் 139-ஆம் பக்கத்தின் முதலாம் பத்தியிலும், 151-ஆம் பக்கத்தின் முதலாம் பத்தியிலும், 153-ஆம் பக்கத்தின் முதலாம் பத்தியிலும் காணப்படுகின்றன. எங்களது இச்சிரமத்திற்குத் தயவாய் உதவிசெய்யுங்கள்.

பதில்: அவ்வாக்கியங்களினுடைய இணக்கத்தினைக் காட்டுவதற்கு நாங்கள் பிரியப்படுகின்றோம். 139-ஆம் பக்கத்தின் முதலாம் பத்தியில், நாங்கள் சுபாவங்களைக்குறித்து விவரித்திருந்தோம்; மேலும் திவ்விய சுபாவத்தினைப் பெற்றுக்கொள்ளும் சிறுமந்தையினர், மற்றவர்களுக்கு மேலாகக் காணப்படுவார்கள் என்று காண்பித்திருந்தோம்; அடுத்ததாக திவ்விய சுபாவத்தில் இல்லாமல், ஆவிக்குரிய சுபாவத்தில் திரள்கூட்டத்தினர் காணப்படுவார்கள்; சுபாவத்தினுடைய அடுத்த வரிசையில் முற்பிதாக்கள் - "தேவதூதர்களுக்கும் சற்று சிறிய" சுபாவத்தில் காணப்படுவார்கள் என்று காண்பித்திருந்தோம்.

151-ஆம் பக்கத்தினுடைய முதலாம் பத்தியில் மதிப்பிலும், கனத்திலும் இந்தப் பல்வேறு வகுப்பாருக்கான ஸ்தானங்களுடைய வரிசைகளைக் காண்பிப்பதற்கு நாங்கள் முயற்சித்திருக்கின்றோம். இங்கு நாங்கள் முற்பிதாக்களைத் திரள்கூட்டத்தாருக்கு மேலானவர்களாக வைக்கின்றோம். இதுவே பொருத்தமான வரிசையாக நமக்குத் தெரிந்தது; ஏனெனில் முற்பிதாக்கள், மிகவும் குறிப்பாக அவர்களது

**R3445 : page 313**

ஜெயங்கொள்ளும் தன்மையில், சத்தியத்திற்காய்த் தங்கள் ஜீவியங்களை மனமுவந்து ஒப்புக்கொடுத்த சிறுமந்தைக்கு ஒத்திருந்தார்கள். இந்த வரிசைக்கு வேதவாக்கியங்கள்கூட ஆதரவளிக்கின்றன; 151-ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் லேவியர்களின் வரிசையிலுள்ள நிழல் மாத்திரமல்லாமல், இந்த முற்பிதாக்கள் "பூமியெங்கும் பிரபுக்களாக இருப்பார்கள்" எனும் வேதவாக்கிய அறிக்கையானது, இராஜ்யத்தினுடைய பூமிக்குரிய பாகத்தில் இவர்களுக்கான விசேஷித்த மதிப்பினை அல்லது கனமிக்க ஸ்தானத்தினைச் சுட்டிக்காட்டுவதையும் நாம் ஆதரவாகப் பெற்றிருக்கின்றோம். மறுபடியுமாக வெளிப்படுத்தல் 20:9-ஆம் வசனத்தில் இந்த முற்பிதாக்கள் பரிசுத்தவான்களின் (பரிசுத்தமானவர்களின்) பாளயம், பிரியமான நகரம் எனும் வார்த்தைகளினால் அடையாளப்படுத்தப்படுவதன் மூலம், பூமியில் விசேஷித்த, தனிப்பட்ட மற்றும் தனிச்சிறப்புள்ள வகுப்பாரெனச் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளனர். அந்தக் காலத்தில், ஆயிர வருஷத்தினுடைய முடிவில் இவர்கள் பூரணத்தில் காணப்படுவார்கள் எனும் உண்மையும், அப்போதும்கூட இந்த முற்பிதாக்கள் குறிப்பிடத்தக்க விதத்தில் தனி வகுப்பாராய் இருப்பார்கள் எனும் உண்மையும், மனுஷ சுபாவத்தின் பூரண நிலைக்கும் அதிகமான மற்றும் மேலான உயர்ந்த கனத்தின் நிலைமையினை முற்பிதாக்கள் விஷயத்தில் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. நித்தியமான எதிகாலத்தில், ஆயிர வருஷத்திற்கு அப்பால் இவர்களுக்குக் கர்த்தர் என்ன விசேஷித்தப் பலனை வைத்திருப்பார் என்பது குறித்து நமக்குக் கூறப்படவில்லை; ஆனாலும் வானங்களையும், தேவனுடைய கரத்தின் கிரியைகளையும் மற்றும் குடியிருப்பிற்காக ஆயத்தப்பட்டுவரும் எண்ணற்ற உலகங்களையும் குறித்து நாம் எண்ணிப்பார்க்கையில், தீமையினுடைய ஆளுகையின்கீழ் மரணபரியந்தம் உண்மையுள்ளவர்களாகக் காணப்பட்ட இந்த முற்பிதாக்கள், ஆயிர வருஷ யுகத்தில் மட்டுமல்லாமல்,

அதன் பிற்பாடும் இன்னும் சில கூடுதலான கனமிக்க ஊழிய வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்வார்கள் என்று நாம் அனுமானிப்பது நியாயமானதாகவே இருக்கும். ஆகையால் இப்படிப்பட்ட பல்வேறு காரணங்களுக்காக, இவர்கள் சுபாவத்தின் விஷயத்தில் கீழ்த்தள/வரிசையில் காணப்பட்டாலும், இவர்களைக் கனத்தின் விஷயத்தில் திரள்கூட்டத்தாரைவிட மேல் வரிசையில் வைக்கின்றோம்.

153-ஆம் பக்கத்தினுடைய முதலாம் பத்தியில், இந்த மூன்று வகுப்பாருடைய உயிர்த்தெழுதலின் கால வரிசையினைக் குறித்து விவரித்திருக்கின்றோம்; மேலும் சிறுமந்தையினருக்கடுத்து முற்பிதாக்கள் உயிர்த்தெழுதலில் பூரணப்படுத்தப்படுவார்கள் எனும் கருத்தினை - அதாவது இவர்கள் பொதுவான உயிர்த்தெழுதலில் முதலாவது பங்கடைவார்கள் எனும் கருத்தினை நாங்கள் முன்வைத்திருக்கின்றோம். சிறுமந்தையினர் மாத்திரமே முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கடைவார்கள் என்பதை நினைவில் கொள்வோமாக. இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியராயிருந்து, அவரோடேகூட ஆயிரம் வருஷம் அரசாளுவார்கள் (வெளிப்படுத்தல் 20:6). எந்த உறுதியான வேதவாக்கிய ஆதரவு இல்லாமல், முற்பிதாக்களின் உயிர்த்தெழுதல் 1914-ஆம் வருஷத்தில் அல்லது விரைவில் சம்பவிக்கும் என்பது எங்களுடைய எதிர்ப்பார்ப்பாய் இருக்கின்றது; திரள்கூட்டத்தார் நிறைவு பெற்றிருக்கமாட்டார்கள் என்று நாங்கள் புரிந்துகொள்கின்றோம் - ஏனெனில் இவர்களில் சிலர் புறஜாதியாருடைய காலங்களின் நிறைவினைத் தொடர்ந்து வரும் மகா உபத்திரவ காலத்தின் மற்றும் ஒழுங்கின்மையினுடைய காலத்தின் ஊடே கடந்துசெல்வார்கள்.

இந்தக் கருத்துகளை வைத்துக்கொண்டு, மேற்கூறப்பட்டுள்ள பத்திகள் கவனமாய் ஆராயப்படுமானால், அனைவருக்கும் காரியம் தெளிவாகும் என்று நாங்கள் நம்புகின்றோம்.

----------------------------------